[1992 பிப்ரவரி 5

சங்கு குளித்தல்.

60

*4876 திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் பிடிக்கும் மீன்கள் மீனவ தொழிலாளர்களுக்கே சொந்தம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளதுபோல, கடலில் எடுக்கும் சங்குகள் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கே சொந்தம் என்று ஆணை பிறப்பிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் வாழும் மீன் இனங்களை அரசுடைமை அதாவது (Monopoly) என்று அரசு அறிவிக்கவில்லை. எனவே மீன்பிடிக் கலங்களைக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் தங்களால் பிடிக்கப்படும் மீன்களை தங்களுடைய உடைமையாகக் கொண்டு விற்பனை செய்து அதன் பலனை அனுபவிக்கின்றார்கள். ஆனால் கடல் உயிர்வாழ் இனங்களான முத்தும், சங்கும் (Pearl & Chank) அரசுடைமையாக (Monopoly) அரசினால் அறிவிக்கப்பட்டு, அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மீன் வளத் துறையின் கண்காணிப்பிலும் அனுமதியின் பேரிலும் அனுமதி பெற்ற குளியாட்கள் மூலம் சங்கு குளித் தொழில் நடைபெறுகிறது. எனவே இந்த வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10-35

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, திருச்செந்தூர், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த கடலில் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து, கடலுக்குள், 80 அடி ஆழம் சென்று, அவர்கள் இந்தச் சங்கினை எடுத்து வருகிறார்கள். எடுத்து வருகிற இந்தச் சங்கினை மீன் இலாக்காவிடம் ஒப்படைத்து, அவர்கள் அந்தச் சங்கினை ஏலம் விடுகிறார்கள். ஏலத்திலே வருகின்ற பணத்தை 90 சதவீதம் சங்கு தொழிலாளர்களுக்கும், 10 சதவீதத்தை அரசாங்கமும் எடுத்துக் கொள்கிறது. ஆகவே, இதன் மூலமாக ஏலம் எடுக்கின்ற வியாபாரிகளுக்குத்தான் இலாபம் கிடைக்கிறதே தவிர, அரசாங்கத்திற்கோ அல்லது சங்கு குளி தொழிலாளர்களுக்கோ எந்தவித இலாபமும் கிடைக்கவில்லை. கடந்த பத்தாண்டுகளாக மீன் இலாக்காவுக்கு இதன் மூலமாக . எந்தவிதமான இலாபமும் இல்லை. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

1992 பிப்ரவரி 5]

திரு. எஸ். டேனியல்ராஜ் : மீன்பிடி தொழிலாளர்கள் எப்படிக் கடலில் பிடிக்கின்ற மீன்கள் அவர்களுக்குச் சொந்தம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதோ அதே போன்று கடலில் சங்கு குளிக்கின்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் குளிக்கின்ற சங்கு அவர்களுக்கே சொந்தம் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது உள்ள ஆணைப்படி, சங்கு குளிப்போர் ரூபாய் 100 செலுத்தி, அனுமதி பெற்று, துறையின் கண்காணிப்பில் சங்கு குளித்து எடுக்கலாம். இவர்களுக்குத் துறை, அடையாள அட்டையும் வழங்கி, குளித்து எடுத்த சங்கைத் துறையிடம் தந்தால், குளித்து எடுத்த சங்கை அலுவலர்களால் நியாயமாக நிர்ணயிக்கப்பட்டு, சங்குகளின் விலையை, அதன் அடிப்படையில் மதிப்பிட்டு, முதலில் 50 சதவீதம் தொகை செலுத்தப்பட்டு விடுகிறது. பிறகு ஒரு குறிப்பிட்ட நாளில், தனித்தனியாகக் குவியலாக்கி, வியாபாரிகளுக்குக் காண்பித்து ஏலம் விடப்படும். ஏலத் தொகை வரப்பெற்றதும், உடனே சங்கு குளித்து எடுத்தவர்களுக்கு மீதம் உள்ள 50 சதவீதம் தொகை பட்டுவாடா செய்யப்பட்டு விடும். எனவே, இதில் சங்கு குளிப்பவர்களுக்கு ஏமாற்றமோ, அல்லலோ இருப்பதாக அரசுக்குத் தெரிவிக்கவில்லை. அப்படியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், அவர் எந்த மாதிரியான புரப்போசல் கொடுக்கிறார்கள் என்பதையறிந்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசு கனிவுடன் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மீன் இலாக்காவின் மூலமாக சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு, முதல் ரக சங்குக்கு 10 ரூபாயும், இரண்டாம் ரக சங்குக்கு 7 ரூபாயும், மூன்றாம் ரக சங்குக்கு 1 ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்தத் தொகையைப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உயர்த்தி, முதல் ரக சங்குக்கு 15 ரூபாயும், இரண்டாம் ரக சங்குக்கு 10 ரூபாயும், மூன்றாம் ரக சங்குக்கு **2** ரூபாயும் வழங்குவதற்கு அரசு முன் வருமா? கடலில் சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு 6 மாதங்கள் தான் வேலை இருக்கிறது ; 6 மாதங்கள் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மற்றக் காலங்களில் மீன் பிடிப்பதற்கு மீன்பிடி சாதனங்களும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். விரிவாகப் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள், கூலி நிர்ணயம் பற்றி, 10, 7, 1 என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி பதில் அளித்தால் போதும்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய வகையில் எவ்வாறு அந்த மாற்றத்தை அளிக்கலாம் என்று முன் வந்தால் அதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறுகிய கால வினா.

பத்திரப் பதிவுக் கட்டணம்.

1—

*8463 திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பத்திரப் பதிவுக் கட்டணம் அதிகமாக இருப்பதால் நிறைய பேர் அண்டை மாநிலமான கேரளாவிற்குச் சென்று பத்திரம் பதிவு செய்வதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) பதிவுக் கட்டணம் எல்லா இடங்களிலும் ஒரு சதவீதம் தான். கேரளாவில் பதிவுக் கட்டணம் ஒரு சதவீதம். தமிழ்நாட்டில் ஒரு சதவீதம் தான். முத்திரைக் கட்டணம் தான் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. அப்படி முத்திரைக் கட்டணம் கேரளாவில் அதிகபட்சமாக 5 சதவீதம். தமிழ்நாட்டில் முத்திரைக் கட்டணம் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நகரங்களில் 8 சதவீதமும், சில இடங்களில் 7 சதவீதமும் உள்ளது. சர்சார்ஜ்—மேல்வரி கேரளாவில் 5 சதவீதம் இருக்கிறது கேரளா மாநகரில். மற்ற இடங்களில் 4 சதவீதம் இருக்கிறது.

முற்பகல் 10-40

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுவாக முத்திரைக் கட்டணம் அதிகமாக இருப்பதால், நிறைய பேர் கேரளாவிற்குச் சென்று அங்கே ஓர் 5 சென்ட் நிலத்தை உடனடியாக வாங்கி அப்போதே பத்திரத்தைப் பதிவு செய்து கொள்கிறார்கள். இங்கே, நிலத்தினுடைய மதிப்புக்குத்தான் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அங்கே 47-ஏ என்கிற பிரிவைப் பயன்படுத்தி, குறைந்த கட்டணத்திலே பதிவு செய்து கொண்டு வருகிறார்கள். அதனால், தமிழக அரசுக்கு மிகப் பெரிய வருவாய் இழப்பு